பத்திரிக்கைச் செய்தி

நாள் 28.01.2019

அகில இந்திய குடிமுறைப் பணியாளர்களுக்கான கூடைப்பந்தாட்ட விளையாட்டுப் போட்டிகள் நிறைவு விழாவில் மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை மற்றும் இளைஞர் நலன் மேம்பாடு மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு கே.ஏ.செங்கோட்டையன் அவர்கள் கலந்து கொண்டு வெற்றி பெற்ற அணிகளுக்கு சான்றிதழ்களையும் கோப்பையினையும் வழங்கினார்.

அகில இந்திய குடிமுறைப் பணியாளர்களுக்கான கூடைப்பந்தாட்ட விளையாட்டுப் போட்டிகள் **நேரு உள்விளையாட்டரங்கில் 25.01.2019 முதல் 28.01.2019 வரை நடைபெற்றது. இவ்விளையாட்டுப் போட்டியில் 264 வீரர்களைக் கொண்ட 22 மாநில விளையாட்டு அணிகள் கலந்துகொண்டன. இதில் சென்னை மண்டல விளையாட்டு வாரியம் முதலிடத்தையும் (RSB, Chennai) புதுடெல்லியின் மத்திய தலைமைச் செயலகம் இரண்டாம் இடத்தையும் (Central Secretariat, Delhi) கொச்சின் மண்டல விளையாட்டு வாரியம் மூன்றாமிடத்தையும் (RSB, Cochin) தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (TN Govt. Staff) நான்காமிடத்தையும் பெற்றன.**

**இந்த சிறப்புமிகு நிகழ்ச்சியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு** மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை மற்றும் இளைஞர் நலன் மேம்பாடு மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு கே.ஏ.செங்கோட்டையன் அவர்கள் கலந்து கொண்டு வெற்றி பெற்ற

அணிகளுக்கு கோப்பைகள், பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கிப் பேசுகையில், இந்த சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்திய அளவில் 22 அணிகளுக்கிடையேயான போட்டியில் RSB, Chennai முதலிடத்தையும், இரண்டாமிடத்தினை புதுடெல்லியின் மத்திய தலைமைச் செயலகம் (Central Secretariat, Delhi) பெற்றுள்ள அணியின் வீரர்களையும் அவர்களுடைய பயிற்சியாளர்களையும் அரசின் சார்பில் வாழ்த்துகிறேன். இப்போட்டியில் பங்குபெற்ற அனைத்து வீரர்களையும் வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளேன். விளையாட்டில் மட்டும்தான் இரண்டாமிடம் பெற்றவர்கள் முதலிடத்தையும் பெறமுடியும். அத்தகைய சிறப்பு விளையாட்டிற்கு உண்டு. விளையாட்டைப் பொருத்தவரையில் போட்டி மனப்பான்மை உண்டு ஆனால் பொறாமை இருக்காது. மறைந்த மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2004ஆம் ஆண்டில் விளையாட்டிற்கென்று விளையாட்டுப் பல்கலைக்கழகம் அமைத்தார்கள். அதுபோல, நேரு உள் விளையாட்டரங்கம் குறுகிய காலத்தில் கட்டப்பட்டு விளையாட்டு வீரர்களுக்குப் பயன்பட ஓர் அடித்தளமான அமைப்பை உருவாக்கி வரலாற்றுச் சாதனை படைத்தார்கள். இந்திய அளவில் தமிழகம் விளையாட்டுப் போட்டிகளில் தொடர்ந்து முன்னிலையில் வருவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் பல சிறப்பு வாய்ந்த திட்டங்களை செயல்படுத்த உள்ளார்கள். சமீபத்தில் நேரு உள்விளையாட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு விளையாட்டுப் போட்டிகளில் தங்கப்பதக்கங்கள் பெறுகிறவர்களுக்கு அரசுத்துறைகளில் உள் ஒதுக்கீடாக 3% வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்கள். அதற்கான பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதை நாங்கள் நிச்சயம் நிறைவேற்றுவோம் இத்தகைய அறிவிப்பு விளையாட்டு வீரர்களுக்கு ஆக்கத்தையும், ஊக்கத்தையும் கொடுக்கும். தமிழகத்தில் கிராம அளவில் ஒன்றிய அளவில் மாவட்ட அளவில் அதிகளவில் விளையாட்டில் ஈடுபடும் விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்தும் வகையில் 100 ஸ்மார்ட் விளையாட்டு அரங்கங்கள் கட்டப்படுவதற்கு திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. அதுபோல சிறந்த விளையாட்டு வீரர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு ஊக்கப்படுத்துவதற்கும் அவர்கள் விளையாடுகிற போட்டிகளில் நம்பிக்கையோடு பங்குபெறுவதற்கும் சுமார் 10 ஆண்டு காலத்திற்கு பயிற்சி கொடுக்க தனியார் நிறுவனங்களை அழைத்துப் பேசிக் கொண்டிருக்கிறோம். அத்தகைய திட்டம் செயல்பாட்டிற்கு வரும்போது நல்லதொரு பலன் விளையாட்டு வீரர்களுக்குக் கிடைக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.**

2017-18ஆம ஆண்டில் அகில இந்தியப் பள்ளிக் குழுமத்தால் நடத்தப்பட்ட தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெற்று பதக்கங்கள் வென்ற தமிழக பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்காக இந்தியாவிலேயே முதல் மாநிலமாக அரசு ரூ.8 கோடியே 21 இலட்சம் உயரிய ஊக்கத்தொகையை

அண்மையில் இங்கு நடைபெற்ற நிகழ்ச்சியில் மாணவ, மாணவியர்களுக்கு சான்றிதழ்களையும் ஊக்கத்தொகையினையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள். அந்த வகையில் தமிழ்நாடு விளையாட்டில் முதன்மை மாநிலமாக உருவாவதற்கு அரசு அனைத்து பூர்வாங்க நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன் என்று உரையாற்றினார்.

மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை மற்றும் இளைஞர் நலன் மேம்பாடு மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு கே.ஏ.செங்கோட்டையன் அவர்கள் இந்நிகழ்ச்சியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு சான்றிதழ்களையும் கோப்பையினையும் வழங்கினார்கள். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் அரசு முதன்மைச் செயலர் திரு தீரஜ்குமார், இஆப., அவர்கள் தலைமையுரை ஆற்றினார்கள். விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் திரு சந்திர சேகர் சாகமுரி, இஆப அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்கள். முதுநிலை மேலாளர் திரு சாமுவேல் ராஜா டேனியல் நன்றி கூறினார்.

வெளியீடு - விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், சென்னை.